24.08.2026

**C. C. No. 103/2012**

**அ.சா. 9 – திரு.பிரபாகர்**

**2, 3, 7 died. மற்ற எதிரிகள் ஆஜர்.**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு 1, 4, 5, 9, 10, 11 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 12.48 பி.ப – 01.20 பி.ப**

ஊஞ்சாம்பட்டி சர்வே எண்.186 மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் என்றால் சரிதான். அந்த 3 ஏக்கர் ஆதியில் திம்மன் மாதாரி, அழகன் மாதாரி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். திம்மன் மாதாரியின் மகன் மாரி மாதாரி தனக்குரிய ஒன்றரை ஏக்கரை 20.01.1953ல் சின்னசீனி செட்டியார் என்பவருக்கு கிரையம் செய்துகொடுத்தார் என்றால் சரிதான். 28.02.1955ல் சின்னசீனி செட்டியார் என்பவர் சுப்பையா குடும்பன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். திம்மன் மாதாரி மற்றும் அழகன் மாதாரிக்கு எந்த பக்கம் ஒதுக்கப்பட்டது என்றால் அது எனக்கு நேரடியாக தெரியாது. திம்மன் மாதாரி பெயரில் வடக்கு பக்கமும் அழகன் மாதாரி பெயரில் தெற்கு பக்கமும் பட்டா இருந்தது. யார் எந்த பகுதியை அனுபவித்து வந்தார்கள் என்றால் பட்டா ஏற்பட்டவாறு அவரவர் பாகத்தை அனுபவித்து வந்தார்கள். பட்டா தவறாக ஏற்பட்டுள்ளது என்றும் திம்மன் மாதாரி தெற்கு பக்கமும் அழகன் மாதாரி வடக்கு பக்கமும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. மொத்த 3 ஏக்கர் சொத்தையும் சுப்பன் குடும்பன் 1955லிருந்து அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் விசாரணையில் தெரிய வந்தது. சுப்பையா குடும்பன் இறந்த பின்பு வாரிசு படி அவர்களது வாரிசுகளான பெருமாயி, போஸ் தொந்தி ஆகியோர்கள் 01.09.1994ல் லட்சுமணன் என்பவருக்கு ஒரு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அவர் அனுபவத்தில் இருந்த பகுதிக்குதான் பொது அதிகார பத்திரம் கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது.



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.08.24 16:35:20 +0530

சுப்பையா குடும்பன் சின்னசீனி செட்டியாரிடமிருந்து கிரையம் வாங்கிய சொத்தை சுப்பையா குடும்பன் வாரிசுகள் யாருக்கும் கிரையம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, லட்சுமணன் என்பவருக்கு பொது அதிகார பத்திரம் கொடுத்தார். அந்த பொது அதிகார பத்திரம் பிற்காலத்தில் இரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அனுபவத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட பொது அதிகார பத்திரத்தை அழகன் மாதாரி வாரிசுகள் ஆட்சேபித்ததன் பேரில் அந்த பொது அதிகார பத்திரம் மற்றும் அதனால் ஏற்பட்ட கிரைய பத்திரம் இரத்து செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. இவ்வழக்கின் புகார்தாரர் வாசுகி என்பவர் சின்னசீனி செட்டியார் என்பவரிடமிருந்து சுப்பையா குடும்பன் கிரையம் வாங்கிய சொத்தை தவறான நபர்களிடமிருந்து கிரையம் பெற்று பொய்யாக இந்த புகாரை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சுப்பையா குடும்பன் வாரிசுகள் கிரையம் பெற்ற சொத்தை யாருக்கும் அவரது வாரிசுகள் கிரையம் கொடுக்காத நிலையில் அந்த சொத்து அவர்களிடம்தான் உள்ளது என்றால் சரியல்ல. புகார்தாரருக்கு நான் தரகராக இருந்து அ.சா.ஆ.19 கிரையத்தை கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். புகார்தாரருக்கு நிலைத்தை பற்றி தவறான தகவலை கொடுத்து சொத்துக்கு பாத்தியமில்லாத நபர்களிடம் கிரையம் பெற செய்துள்ளதால் நான்தான் இவ்வழக்கின் குற்றவாளி என்றால் சரியல்ல. அதனால்தான் நான் உண்மை தகவலை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அ.சா.ஆ.19 கிரைய ஆவணத்திற்கு தரகராக மட்டும் இல்லாமல் பவர் ஏஜெண்டாகவும் இருந்துள்ளேன் என்றால் சரிதான். நான் புகார்தாரருக்கு யாரிடமிருந்து பவர் வாங்கி கொடுத்தேன் என்றால் செல்லையா என்பவரிடமிருந்து. அவருக்கு அந்த சொத்து எவ்வாறு வந்தது என்றால் காளிராஜன் என்பவரிடமிருந்து செல்லையா கிரையம் வாங்கியிருந்தார். அ.சா.ஆ.19 ஆவணத்தில் வடக்கு பக்க எல்லையாக எதிரிகளின் தந்தை சுப்பையா என்ற பெயர் காணப்படுகிறது என்றால் சரிதான். அந்த கிரையம் ஏற்பட்ட காலத்திலும் சீனி செட்டியாரிடமிருந்து கிரையம் பெறப்பட்ட சொத்து சுப்பையா குடும்பன் வாரிசுகள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. தெற்கு பக்கம் அழகன் மாதாரி சொத்து என்பது தவறு என்றால் சரியல்ல. அ.சா.ஆ.19ல் தெற்கு எல்லை என்பது வடிவேல் பிள்ளை வகையாறா நிலம் என்பது சரிதான். அது அழகன் மாதாரி சொத்திற்கு தெற்கு


JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.08.24 16:35:25 +0530

பக்கம் அமைந்துள்ளது. நான்தான் இல்லாத சொத்தை பொறுத்து வாசுகிக்கு மோசடியாக ஒரு கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எந்தவித மோசடி ஆவணம் உற்பத்தி செய்யவில்லை என்றால் சரியல்ல.

<u>6, 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் பவர் வாங்கி புகார்தாரருக்கு கிரையம் எழுதி கொடுக்கும்பொழுது மூல ஆவணம் அனைத்தையும் பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். 1953 கிரைய ஆவணத்தில் மாரி மாதாரி சின்னசீனி செட்டியாருக்கு கிரையம் கொடுத்த ஆவணத்தில் சர்வே எண்.186ல் மொத்த 3 ஏக்கரில் தெற்கு பக்கம் ஒன்றரை ஏக்கர் கிரையம் செய்து கொடுத்தாக உள்ளது என்றால் சரிதான். ஆனால், அது தவறானது. அந்த ஒன்றரை ஏக்கர்தான் சின்னசீனி செட்டியார் சுப்பையா குடும்பனுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சின்னசீனி செட்டியார் கிரையம் பெற்ற சொத்து வடக்கு பக்க சொத்து. அந்த வடக்கு பக்க சொத்தைதான் கிரையம் கொடுத்துள்ளார். ஆனால் அந்த ஆவணத்தில் தெற்கு பக்க சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பத்திரப்படி தெற்கு பக்க சொத்துதான் உள்ளது. சுப்பையா குடும்பன் மற்றும் அவரது வாரிசுகள் தெற்கு பக்கம் கிரையம் பெற்ற சொத்தை இது வரை யாருக்கும் கிரையம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. லட்சுமணன் என்பவருக்கு பவர் கொடுத்து கிரையம் செய்துவிட்டார்கள். அந்த லட்சுமணன் பவர் பத்திரத்தில் வடக்கு பக்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**(உணவு இடைவேளைக்கு பின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி... 02.22 பி.ப – 02.36 பி.ப)**

01.09.1994ல் வடக்கு பக்கம் சொத்தை பொறுத்து லட்சுமணன் என்பவருக்கு பவர் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். தற்பொழுது என்னிடம் காட்டப்படுவது 28.02.1955 தேதியிட்ட சின்னசீனி செட்டியார் சுப்பையா குடும்பனுக்கு கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல்தான். அந்த ஆவணம் **எ.சா.ஆ.1** ஆகும். அந்த ஆவணத்தில் சொத்து விபரத்தில் சர்வே எண்.186ல் ஏக்கர் 3ல் தென்பாகம் ஏக்கர் 1 செண்ட் 50 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தென்புற சொத்தை


JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.08.24 16:35:30 +0530

பொறுத்துதான் செல்வம், வீராசாமி, குமார் ஆகியோர்கள் கெப்பணன் என்பவரிடம் கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். தென்பக்கம் 1 ஏக்கர் 50 செண்டை பொறுத்து சுப்பையா குடும்பன் வாரிசு அல்லாத அழகன் மாதாரி வாரிசு வழிமுறையில் நாங்கள் கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். நான் பவர் வாங்கிய காலத்தில் சொத்தில் மூல ஆவணங்கள், 1955ல் சுப்பையா குடும்பன் பெயரில் இருந்த கிரைய ஆவணத்தை பற்றி தெரிந்துதான் நான் பவர் பெற்றேன் என்றால் சரிதான். 1955ம் ஆண்டு சுப்பையா குடும்பன் கிரையம் வாங்கிகொண்டு சுப்பையா குடும்பன் வாரிசுகள் அல்லாத மூன்றாம் நபரிடம் நான் பவர் பத்திரம் பெற்று மோசடி ஆவணங்கள் உற்பத்தி செய்து புகார்தாரருக்கு கிரையம் செய்து கொடுத்தேன் என்றாலும் புகார்தாரர் செல்வாக்கை பயன்படுத்தி பொய் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்ய காரணமாக இருந்துள்ளால் என்றாலும் அதை அனுசரித்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 6, 8 எதிரிகள் எந்த தவறும்செய்யவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.08.24 16:35:34 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 24.08.2026